செ.வெ.எண் : 61 நாள்:22.06.2021

## கோயம்புத்தூர் மாவட்டம்

## இ.எஸ்.ஐ மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் முழுபாதுகாப்பு கவச உடை (PPE-kit) அணிந்து, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் பிரிவுக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

---

கோயம்புத்தூர், இ.எஸ்.ஐ மருத்துவகல்லூரி மருத்துவமனையில் இன்று (22.06.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் முழுபாதுகாப்பு (PPE-kit) கவச உடை அணிந்து, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் பிரிவுக்கு நேரில் சென்று பார்வையிட்டார். மேலும், கோவை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை மற்றும் இ.எஸ்.ஐ மருத்துவகல்லூரி மருத்துவமனைகளில், குழந்தைகள் கொரோனா தொற்றால் பாதிக்கப்படுவோராயின் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அமைக்கப்பட்டுள்ள கூடுதல் படுக்கை வசதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வின்போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி.கவிதா, கோவை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.நிர்மலா, இ.எஸ்.ஐ மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ரவீந்தரன், மற்றும் மருத்துவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, கொரோனா தொற்று பாதித்தவர்களை விரைந்து கண்டறிந்து தனிமைப்படுத்தி சிகிச்சையளித்தல், புதிய தொற்று ஏற்படாத வகையில் தடுப்பூசி செலுத்துவதை அதிகப்படுத்துதல், கிராமங்களிலும் வீடுகள் தோறும் காய்ச்சல் கணக்கெடுப்பு

பணிகள் உள்ளிட்ட பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மூலம் கொரோனா தொற்று கடந்த சில தினங்களாக வெகுவாக குறைந்துள்ளது.

கோவை, இ.எஸ்.ஐ மருத்துவகல்லூரி மருத்துவமனையில் கொரோனா தொற்றுக்கு சிகிச்சையளிக்கும் வகையில் தேவையான அனைத்து பிரத்யேக வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தேவைகளின் அடிப்படையில் கூடுதல் கட்டிடங்களில் புதிய படுக்கைகள் ஏற்படுத்துதல், ஆக்சிஜன் பைப்லைன் அமைத்தல், ஆக்சிஜன் செறிவூட்டிகள் என பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு கொரோனா தொற்றுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

**இந்நிலையில் இன்று இ.எஸ்.ஐ மருத்துவகல்லூரி மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முழுபாதுகாப்பு கவச உடை** (PPE-kit) **அணிந்து, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் பிரிவுக்கு நேரில் சென்று நோயாளிகளை சந்தித்து நலம் விசாரித்து, அவர்களின் தேவைகளை கேட்டறிந்தார்.**

குழந்தைகள் கொரோனா தொற்றால் பாதிக்கப்படுவோராயின் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் குழந்தைகள் நலப்பிரிவில் 30 தீவிர சிகிச்சை படுக்கைகள், 100 ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய படுக்கைகள், 370 சாதாரண படுக்கைகள் என 500 படுக்கைகளும், இ.எஸ்.ஐ மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 100 தீவிர சிகிச்சை படுக்கைகளும், 70 ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய படுக்கைகள் என 170 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, இ.எஸ்.ஐ மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றில் குழந்தைகளுக்கென ஏறப்படுத்தப்பட்டுள்ள சிறப்பு படுக்கை வசதிகள், ஆக்சிஜன் வசதியுடன் கூடிய படுக்கைகள், தீவிர சிகிச்சை பிரிவு ஆகியவற்றினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு

ஆய்வு மேற்கொண்டதுடன், அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள மருத்துவ சிகிச்சை வசதிகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

மேலும், மருத்துவமனைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருவது குறித்து மருத்துவர்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., கேட்டறிந்தார்.

பொதுமக்கள் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியினை பின்பற்றுதல் மற்றும் அரசு வழிகாட்டி நெறிமுறைகளை முழுமையாக கடைப்பிடிப்பதன் மூலம் கொரோனா தொற்று பரவலை முழுவதாக கட்டுப்படுத்த முடியும். மேலும், அரசால் மேற்கொள்ளப்பட்டு தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முழுஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**